# ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழா

# இரண்டாவது திருவழிபாடு ஆண்டு

# 2024-05-12

(*இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம்.* 1:1-11,

*பதிலுரைப்பாடல்: திபா:* 47: 1-2. 5-6, 7-8,

*திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 4: 1-13,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 16:15-20)

## திருப்பலி முன்னுரை:

*இறைவனில் இனியவர்களே, ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழா திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்வு அடைகிறோம். மரணத்தை வெற்றி கொண்டு உயிர்த்தெழுந்த இறைமகன் இயேசு, நாற்பது நாட்கள் தனது சீடர்களை சந்தித்து உறுதிபடுத்திய பின்பு விண்ணேற்றம் அடைந்து தந்தையாம் இறைவனின் வலது பக்கத்தில் அமர்கிறார். உலகெங்கும் நற்செய்தியை அறிவிக்கவும், அரும் அடையாளங்களைச் செய்யவும் நம் ஆண்டவர் நமக்கு அதிகாரம் தந்துவிட்டு சென்றிருக்கிறார். அவர் தந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, இயேசுவின் உண்மையுள்ள சாட்சிகளாக வாழ, இத்திருப்பலியில் நாம் உருக்கமாக மன்றாடுவோம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*தூய ஆவியாம் துணையாளரை அனுப்பி திருஅவையை வழிநடத்தும் இறைவா!*

*உம் திருஅவையின் அனைத்து ஊழியர்களையும் தூய ஆவியின் வல்லமையால் நிரப்பி, அவர்கள் தூய ஆவியின் துணையால் அனைவரையும் இறையுறவில் வழிநடத்திட வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வாழ்வளிக்கும் இறைவா!*

*விலைவாசி உயர்வு, வன்முறைகள், உணவு மற்றும் இருப்பிடம்: இல்லாமை, நிறவெறி என பல்வேறு துன்பங்களுக்கு மக்கள் உள்ளாகி, துன்பப்படும் நிலை உயர்ந்து வருகிறது அம்மக்களுக்குத் துன்பத்திலிருந்து விடுதலை கொடுக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பு செலுத்துங்கள் என்று கூறிய இறைவா!*

*நாங்கள் அன்பை குடும்பங்கள் மீதும் சமுதாயத்தின் மீதும், நலிவுற்ற, கைவிப்பட்ட மக்கள் மீதும் காட்ட வேண்டிய அருளைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*கருணையின் இறைவா!*

*நோயாளிகள், முதியவர்கள், கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் நல்ல உடல்நலமும், பாதுகாப்பும், உடனிருப்பும் தந்து வழிநடத்திட வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*குழந்தைகளை நேசித்த இறைவா!*

*உலகில் வறுமையால் வாடும் குழந்தைகளைக் கண்ணோக்கிப் பாரும். அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்து, உம்மைப் பின்பற்றும் குந்தைகளாக வாழ வேண்டிய அன்பினைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*தோழமையின் நாயகனே இறைவா!*

*எங்கள் வாழ்க்கையில் வெறும் வெளி அடையாளங்களைத் தனித்து ஆடம்பரங்களைக் குறைத்து, ஆன்மீகத் தயாரிப்பில் எங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டிய வரம்தர வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அமைதியின் தேவனே இறைவா!*

*இயேசு தம் சீடருக்கு வழங்கிய அதே அமைதியை நாங்கள் ஒவ்வொருவரும், மற்றும் உலக மக்கள் ஒவ்வொருவரும் பெற்று மகிழ்ந்திடவும் அனைத்துக் குடும்பங்களிலும் அமைதி, ஒற்றுமை வளர்ந்தோங்கிடவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*ஆயனின் கட்டளையை கடைபிடிப்போரிடம் அன்பு நிறைவடைகிறது என உணர்த்தும் ஆயனே!*

*கடுமையான வார்த்தைகளைப் பேசியதால் மனம் புண்ணாகி அவமானமாக இருக்கிறது. பல்வேறு தொல்லைகள் என்னைப் புண்ணாக்கி வேதனையால் நொந்து போகச் செய்துவிட்டது என மனம் வருந்தும் உள்ளத்தினரை அன்பு நிறைந்த வார்த்தையால் அரவணைக்கவும், உமது திருக்காயங்களுக்குள் பாதுகாப்பாக அவர்கள் வாழவும் அருள் பொழிய, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*